<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS 06/2009</u>**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 13.10.2025

Pw2 (பாலசுப்பிரமணி)

குறுக்கு விசாரணை : 1 ம் பிரதிவாதி தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது

**<u>குறுக்கு விசாரணை (3 ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. 4ம் வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். எனது ஊரில் இருந்து தாவா சொத்து சுமார் 15 கி மீ துரம்இருக்குமா என்றால் 10 கி மீட்டர் இருக்கும். 4ம் வாதி எனக்கு 30 ஆண்டு காலமாக நண்பர். வழக்கு விவரங்கள் எனக்கு பூபதி சொல்லி தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள், என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரங்களை நான் தெரிந்து கொண்டேன். 3ம் பிரதிவாதி தாவா சொத்தில் 6 வீடு மற்றும் ஒரு குடோன் கட்டி மின் இணைப்பு பெற்றும் ஆழ்துளை கிணறு அமைத்தும அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி காவேரி குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 4 எல்லை விஸ்தீரணத்திற்குள் தான் கட்டிடங்கள் அமைந்துள்ளது என்றால் சாட்சி கட்டிடங்கள் எதுவுமில்லை என்று கூறுகிறார். தாவா சொத்தை நான் சுமார் 1 மாதத்திற்கு முன்பு பார்த்தேன். அப்போது கட்டிடங்கள் எதுவுமில்லை. வாதிகளுக்கு எவ்வளவு பூமி பாத்தியம் என்றால் வீடு நீங்கலாக 1 ஏக்கர் 80 சென்ட் விவசாய நிலம் உள்ளது, மொத்தம் 2 ஏக்கர் பாத்தியம். தாவா சொத்து பெருந்துறை குன்னத்தூர் சாலையில் தென்புறம் அமைந்துள்ளது. 3ம் பிரதிவாதியின் கிரய ஆவணத்தை நான் பார்வையிடவில்லை. அந்த கிரய ஆவணத்தை யார் எழுதியுள்ளார்கள், யார் கிரயம் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 2,3 பிரதிவாதிகள் நிதி நிறுவனம் எங்கு வைத்துளளார்கள் என்றால் சென்னிமலை சாலையில் கொங்கு பள்ளிக்கு எதிரே பாங்க் ஆப் பரோடா அருகில் வைத்துளளார்கள். அந்த இடத்திற்கு முகவரி உள்ளதா என்றால் முகவரி தெரியாது. கதவு எண் எனக்கு தெரியாது. யாருக்கு பாத்தியப்பட்ட கட்டிடம் என்று தெரியாது. 2,3 பிரதிவாதிகள் பெயர் தெரியுமா என்றால் சீரங்கசாமி மற்றும் சுப்பிரமணி. நான் எப்போது

வட்டிக்கு கொடுப்பதை பார்த்தேன் என்றால் 2 ஆண்டுகளுக்கு முன்பு பூபதி ரவிசந்திரனிடம் வட்டி கொடுப்பதை பார்த்தேன். 4ம் வாதி 2,3 பிரதிவாதிகளிடம் வட்டிக்கு கொடுத்ததாக எனக்கு நேரடியாக தெரியும் என எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரம் சரியானது தான். 2,3 பிரதிவாதிகளிடம் அவ்வாறு 2,3 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்தார் . எவ்வளவு தொகை என்றுஎனக்கு தெரியாது, என்னை அழைத்துச செல்வார்,நான் வெளியில் நின்று கொள்வேன், அவர் உள்ளே சென்று கொடுத்துவிட்டு வருவார். 3ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் வாங்கி கட்டிடங்கள் கட்டி அனுபவித்து வருகிறார் என்றும் அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வட்டி கொடுத்ததை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 3ம் பிரதிவாதி எழுப்பியுள்ள கட்டிடத்தை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உள்ளூரில் சாட்சிகள் யாரும் வாதிகளுக்கு ஆதரவாக வரவில்லை என்பதால் 4ம் வாதிக்கு நண்பர் என்ற முறையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.13 18:07:31 -0300

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS